**இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஈரோடு.**

**OS**.51/2017

**பக்கம்.5**

02.03.2020

**வா.சா.2 :திரு.அருள்நாதன்**

**சாட்சி இன்று முன்னிலையாகி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை என்றால் சரி. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு நீதிமன்றம் வந்தேனா என்றால் சென்றவாரம் வந்தேன். இந்த வழக்கின் பிரதிவாதிகள் எத்தனை பேர் என்று தெரியுமா என்றால் மணி, செல்வகுமார் மற்றும் முருகேசன் ஆவார்கள். என்ன பாரிகாரம் கேட்டு இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்று கேட்டால் செல்வகுமார் மற்றும் கலைச்செல்வியிடமிருந்து வாதி முருகேசன் மற்றும் அவருடைய தகப்பனார் மணி கடன் வாங்கினார்கள். வியாபாரம் செய்து பணம் நஷ்டம் ஆகிவிட்டது என்றும், பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாகவும், தன்னுடைய வீட்டு பத்திரத்தை திருப்பிக்கொடுக்குமாறு வாதி பரிகாரம் கேட்டுள்ளார். வாதிக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்றால் 3 பாகமாக இருந்தது. 10 செண்ட் இடம் ஒன்று வாதிக்கு உண்டு. 3 செண்ட் இடம் மற்றும் அரை செண்ட் இடம் ஒன்றும் வாதிக்கு இருந்தது. அதன் செக்குபந்தி சொல்ல முடியுமா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. என் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் உள்ள விபரங்கள் யார் எழுதிப்போட்டது என்றால் நான்தான்.முதல் அயிட்ட சொத்து எத்தனை சதுர அடி என்றால் 1400 சதுர அடி

ஆகும். வாதி அதை யாரிடம் இருந்து விலைக்கு வாங்கினார் என்றால் தெரியாது. எந்த மாதம், எந்த தேதியில் அந்த சொத்தை வாதி விலைக்கு வாங்கினார் என்றால் 2002ம் ஆண்டு விலைக்கு வாங்கினார். இரண்டாம் அயிட்டம் மற்றும் 3ம் அயிட்ட சொத்து வாதி யாரிடம் இருந்து எப்போது கிரையம் வாங்கினார் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்து கிரையம் வாங்கும் போது ஏற்பட்ட கிரைய பத்திரங்களில் நான் சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறேனா என்றால் இல்லை. அதனால் வாதியும், அவர் தகப்பனார் மணியும் தாவா சொத்துக்களை கடனுக்காக வாங்கினார்களா அல்லது காசு கொடுத்து வாங்கினார்களா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. முருகேசன் குடியிருந்த வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. முருகேசன் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்த சரசு மற்றும் நந்தினி குடியிருந்த கதவு எண்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. முருகேசன் மனைவியுடன் சரசு மற்றும் நந்தினிக்கு தகராறு ஏற்பட்டு அது காவல்நிலையம் வரை சென்றபோது நானும் உடன்சென்றேனா என்றால் சென்றேன். நான் காவல்நிலையத்திற்கு உள்ளே சென்றேனா என்றால் இல்லை, நான் வெளியே நின்று கொண்டேன், நான் அன்றைய தினம் காவல்நிலையத்திற்கு வாதியுடன் புகார் கொடுக்க செல்லாத காரணத்தினால் தான் நான் எதிலும் சாட்சியாக கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல்நிலையத்தில் பைசல் நடந்ததா என்றால் இல்லை. முருகேசன் மனைவியை சரசு மற்றும் நந்தினி அடித்து கொன்றார்களா என்றால் இல்லை. முருகேசன் மனைவிக்கும், அவருடைய வீட்டில் நடக்கும் விபரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் கொஞ்சமாக தெரியும், நிறைய தெரியாது. முருகேசனின் குழந்தைகளுக்கு தலா ரூ.5 லட்சம் கொடுக்க வேண்டும் என்று

பேசப்பட்டதா என்றால் ரூ.5 லட்சம் மட்டுமே டெபாசிட் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் முருகேசனின் குழந்தைகளுக்கு தலா ரூ.5 லட்சம் கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரியா என்றால் தலா ரூ.5 லட்சம் என்று சொல்லியிருப்பது தவறு. மொத்தம் 5 லட்சம் மட்டுமே குழந்தைகள் பெயரில் டெபாசிட் செய்ய வேண்டும் என்று பேசப்பட்டது. பஞ்சாயத்து யார் யாரை வைத்து பேசப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அந்த பஞ்சாயத்திற்கு செல்லவில்லை. பஞ்சாயத்து பற்றி எனக்கு சொல்லி கேள்விப்பட்டதுதான். ரூ.5 லட்சம் தொகை கொடுமுடி பாரத ஸ்டேட் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியும். முருகேசன் சொல்லி கேள்விப்பட்டேன். முருகேசனுடன் நான் வங்கிக்கு செல்லவில்லை. வங்கியில் முருகேசன் குழந்தைகள் பேரில் எவ்வளவு ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டது என்றால் ரூ.5 லட்சம் வைப்பீடு செய்யப்பட்டது. தாவா சொத்து குறித்து வாதி பலரிடம் கிரைய ஒப்பந்தம்போட்டிருப்பது தெரியுமா என்றால் தெரியும். அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. இந்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் முருகேசனின் அப்பா சொல்லி எனக்கு தெரியும். யாரிடம் அடமான பத்திரம் எழுதி கொடுத்து மணி கடன் வாங்கினார் என்றால் கலைச்செல்வியிடம் ரூ.5 லட்சம் கடன் வாங்கிக்கொண்டு பத்திரம் எழுதிக்கொடுத்தார். அது அடமான பத்திரமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கலைச்செல்வி பெயருக்கு எழுதிக்கொடுத்தது கிரைய பத்திரமா என்றால் இல்லை. அதில் நான் சாட்சியாக கையொப்பம் போடவில்லை. கலைச்செல்விக்கு மணி எழுதிக்கொடுத்தது அடமான பத்திரம் இல்லை என்றாலும்,

அது கிரைய பத்திரம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ.18 சாட்சியிடம் காட்டப்பட்டு அது என்ன பத்திரம் என்று கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டதற்கு சாட்சி அந்த பத்திரத்தை பார்த்து விட்டு அது கிரைய பத்திரம் என்று சாட்சி அளிக்கிறார். செல்வகுமார் எந்த விலாசத்தில் வட்டிக்கடை நடத்தி வருகிறார் என்றால் சிவகிரியில் நடத்தி வருகிறார். அதன் கதவு எண் தெரியாது. வாதி செல்வகுமாரிடம் சென்று பணம் கேட்ட போது நானும் உடன் சென்றேனா என்றால் இல்லை. வாதி செல்வகுமாரிடம் வாங்கியதாக சொல்லும் தொகைக்கு வட்டி எவ்வளவு, எவ்வளவு காலத்திற்குள் திருப்பி கொடுக்க வேண்டும் என்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. முருகேசன் செல்வகுமாரிடம் இருந்து கடன் வாங்கி கலைச்செல்வியிடம் கொடுத்து கடனை அடைத்தார். முருகேசன் கலைச்செல்விக்கு பணம் கொடுத்தவுடன் பத்திரம் ஏதாவது எழுதிக்கொண்டார்களா என்றால் இல்லை. கலைச்செல்வியிடம் கடனாகவோ, அடமானமாகவோ முருகேசன் எவ்வளவு தொகை வாங்கினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. முதல் வாதி வாங்கிய கடனுக்கு கலைசெல்வி ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை. முருகேசனின் தம்பி செல்வகுமார்எந்த தேதி, மாத, வருடத்தில் விபத்தில்இறந்துபோனார் என்று தெரியுமா என்றால் தெரியாது. முருகேசன் மனைவி சத்யா மற்றும் முருகேசன் தம்பி செல்வகுமார் இறந்ததற்கும், இந்த வழக்கிற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்றால் சம்பந்தம் எதுவும் இல்லை. 1 ம் பிரதிவாதி செல்வகுமார் வாதிகளிடம் சொத்தை எப்போது காலி செய்ய சொன்னார் என்றால் எனக்கு தேதி, மாத, வருடம் தெரியாது. அந்த சொத்தில் வாடகைக்கு உள்ளார்களா என்றால் அந்த சொத்தில் வாடகைக்கு இருந்தவர் போனமாதம் காலி செய்து விட்டார். 1 ம் பிரதிவாதி செல்வகுமார் குடி வைத்த ராணி என்பவர் தான்

**பக்கம்.9**

சென்றமாதம் வீட்டை காலி செய்து விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் 2ம் வாதி முருகேசன் நண்பர் என்பதால் இந்த வழக்கில் அவருக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குவி நிறைவுற்றது.